செ.வெ.எண்.331/2009/செமதொஅ நாள்:08.10.2009

**நிஷா புயலால் பாதிக்கப்பட்ட 784 விவசாயிகளுக்கு ரூ.11.37 இலட்சம் மதிப்பிலான் நிவாரண உதவிகளை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கினார்.**

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் செங்குந்தர் திருமண மண்டபத்தில் நிஷா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்பீட்டு உதவித்தொகை வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு 784 விவசாயிகளுக்கு ரூ.11.37 இலட்சம் மதிப்பிலான நிவாரண உதவிகளை வழங்கி விழாப்பேருரையாற்றிப் பேசியதாவது,

நிஷா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்பீட்டு தொகை வழங்கும் விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழகம் முழுவதும் விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்க ரூ.656 கோடி அரசு நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் நிஷா புயலால் பாதிக்கப்பட்ட 784 விவசாயிகளுக்கு ரூ.11.37 இலட்சம் மதிப்பிலான நிவாரண உதவிகள் இன்று வழங்கப்படுகிறது. வெள்ள நிவாரணத்தின் போது ஒரு ஏக்கருக்கு ரூ. 2 ஆயிரம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெள்ள நிவாரணத்தின் போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம் வழங்க உத்தரவிட்டுள்ளார். இந்த ஆண்டு தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தினை இந்திய வேளாண் காப்பீடு நிறுவனம் மூலம் அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஒரு ஹெக்டேருக்கு 260 ரூபாய் காப்பீடு கட்டணமாக விவசாயிகள் செலுத்த வேண்டும். 50 சதவீதம் மான்யத்தை அரசே செலுத்துகிறது. விவசாயிகள் எந்தவிதத்திலும் பாதிக்கப்பட கூடாது என்பதற்காக மாண்புமிகு முதல்வர் பல்வேறு உதவிகள் வழங்கி வருகிறார்.

நெசவுத்தொழில் நின்றுபோய்விட்டால் எந்தவொரு பாதிப்பும் இல்லை. ஆனால், விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டால் உணவு உற்பத்தி பாதிக்கப்படும். எனவே, விவசாயிகள் உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். விவசாய நிலத்தை எக்காரணத்தை கொண்டும் விற்பனை செய்வதை தவிர்த்து விவசாயம் செய்ய வேண்டும். நாடு சிறப்பாக வளர விவசாயம் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த அரசு விவசாயிகளின் நலனில் அக்கரை கொண்டு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பட்ட ரூ.7 ஆயிரம் கோடி கடனை அறவே தள்ளுபடி செய்தார். காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள சிறு/குறு விவசாயிகள் 34320 விவசாயிகள் கடன் தொகை ரூ.32.60 கோடியும், பெரு விவசாயிகள் 14861 கடன் ரூ.29.51 கோடியும் ஆக மொத்தம் ரூ.162.11 கோடி கடன்களை அறவே தள்ளுபடி செய்தார்.

பயிர்களை காப்பதற்காக பயிர் காப்பீட்டு திட்டத்தை கொண்டு வந்ததைப்போல மனித உயிரை காக்கும் கலைஞரின் காப்பீட்டு திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். ரூ.72 ஆயிரத்திற்கு கீழ் உள்ளவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். அமைப்புச்சாரா தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்ந்தவர்களும் பயன்பெறலாம். இத்திட்டத்தில் 100க்கு மேற்பட்ட ஏழை-எளிய மக்கள் சேர்ந்து பயன்பெற்றுள்ளார்கள்.

மாண்புமிகு முதல்வர் ஆட்சிப்பொறுப்பேற்ற முதல் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தில் தமிழகம் முழுவதும் 7½ இலட்சம் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 42 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தினை மேலும் ஒரு ஆண்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீட்டித்துள்ளார். ஏழை-எளிய மக்கள் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்பதற்காக அயராது பாடுபட்டு வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என கூறினார்.

இந்த விழாவில் காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் திருமதி.காமாட்சி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப்பேசினார். மதுராந்தக சட்டமன்ற உறுப்பினர் திருமதி.காயத்ரி தேவி, வேளாண் விற்பனைக்குழுத் தலைவர் திரு.வி.எஸ்.இராமகிருஷ்ணன், நகரமன்றத் தலைவர் திருமதி.கு.மலர்விழி, ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் செல்வி.சசிரேகா ஸ்ரீதரன் ஆகியோர் முன்னிலையுரையாற்றிப் பேசினார்கள். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.டி.உக்கம்சந், மாவட்ட தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.ஸ்ரீதரன், நகரமன்ற துணைத்தலைவர் திரு.எஸ்.டி.பிரேம்சந் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முடிவில் வேளாண் இணை இயக்குநர் திரு.எஸ்.எம்.செல்லப்பிள்ளை நன்றி கூறினார். விழாவில் ஏராளமான விவசாயிகள் மற்றும் கூட்டுறவு வங்கி அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.